திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சோழ நாட்டில், சீர்காழி என்னும் இடத்தில் பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் சிவபாதவிருதயர் தாயார் பெயர் பகவதி அம்மையார். இவருக்குச் ‘‘சம்பந்தர்’’ என்று பெற்றோர் பெயரிட்டனர்.

மூன்று வயதில் ஒரு நாள் தந்தையாருடன் கோயிலுக்குச் சென்றார். தந்தையார் கோயில் கேணிக் கரையில் இருத்திவிட்டுக் குளிக்கச் சென்றார். சிறிது நேரத்தில் தந்தையின் தலை தண்ணீருக்குள் மறைந்தது. தந்தையைக் காணாமல் குழந்தை ‘‘அம்மே, அப்பா’’ என்று அழுதது. சிவபெருமானும் உமாதேவியாரும் அவர் முன்னே தோன்றினார்கள். உமாதேவியார் குழந்தைக்கு ஞானப்பால் கொடுத்து மறைந்தார்.

தந்தையார் சம்பந்தரைக் காணாது தேடி வந்தார். குழந்தையின் வாயில் பால் வடிந்து இருந்தது. ‘‘யார் உனக்கு பால் கொடுத்தது’’ என்று தந்தையார் கேட்டார். உடனே சம்பந்தர். ‘‘தோடுடைய செவியன்’’ எனத் தொடங்கும் தேவாரத்தைப் பாடினார். அதன்பின் எல்லோரும் அவரை திருஞானசம்பந்தர் என்று அழைத்தனர்.

தலங்கள் தோறும் சென்று திருப்பதிகங்கள் பல பாடினார். அவர் பல அற்புதங்கள் செய்தார். இவரின் தேவாரங்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகள் ஆகும். இவரின் குருபூசைத் தினம் வைகாசி மூலம் ஆகும்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி

திருநாவுக்கரசு நாயனார்

திருநாவுக்கரசு நாயனார் சைவசமயகுரவர்கள் நால்வரில் ஒருவர். இவரது தந்தையார் பெயர் புகழனார் தாயார் பெயர் மாதினியார் தமக்கையார் பெயர் திலகவதியார். இவரது இளமைப் பெயர் மருள்நீக்கியார்.

இவர் இளமையில் சமண சமயம் சேர்ந்தார். பின்னர் இவருக்குச் சூலை நோய் ஏற்பட்டது. அவர் வயிற்று வலியால் மிகவும் வருந்தினார். தமக்கையாரிடம் சென்றார். திலகவதியார் தம்பியாருக்கு திருநீறு பூசி

கோயிலுக்குக் கூட்டிச் சென்றார். அவர் "கூற்றாயினவாறு . . ." என்னும் திருப்பதிகம் பாடினார். வயிற்றுவலி நீங்கியது. அன்று முதல் மருள்நீக்கியாரை திருநாவுக்கரசு நாயனார் என்று அன்புடன் அழைத்தனர்.

திருநாவுக்கரசு நாயனார் பல கோயில்களுக்குச் சென்று தேவாரங்கள் பாடினார். அவரின் தேவாரங்கள் 4ம், 5ம், 6ம் திருமுறைகளாகும். இவரின் குருபூசைத் தினம் சித்திரைச் சதயமாகும்.

ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி.

சுந்தரமூர்த்தி நாயனார்

சுந்தரமூர்த்தி நாயனார் சைவசமய குரவர் நால்வரில் ஒருவர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் அவதரித்தவர். இவரின் தந்தையார் சடையனார் தாயார் இசைஞானியார் ஆவர். இவரது இயற்பெயர் நம்பியாரூரர். நம்பியாரூரர் அழகு மிகுந்தவர். அதனால் அவர் சுந்தரர் என அழைக்கப் பெற்றார். மன்னன் நரசிங்க முனையர் பெற்றோரிடம் கேட்டு, நம்பியாரூரரை அரண் மனையிலே வளர்த்து வந்தான்.

நம்பியாரூரர் பல கலையும் பயின்று வளர்ந்தார். திருமணப் பருவம் அடைந்தார். இவரது திருமணத்தில் சிவபெருமான் ஒரு முதிய அந்தணராக வந்து இவரைத் தடுத்தாட் கொண்டார்.

திருவெண்ணெய் நல்லூரில் "பித்தா பிறை சூடி" என்னும் பதிகம் பாடினார். திருவாரூரில் திருத்தொண்டத்தொகை பாடினார். பரவையார், சங்கிலியார் என்னும் இரு பெண்களை மணந்தார். சுந்தரர் பல அற்புதங்கள் செய்தார். இவர் தமது 18 ஆவது வயதில் கயிலை சேர்ந்தார். இவரது குருபூசை நாள் ஆடிச் சுவாதி ஆகும். இவர் பாடிய தேவாரங்கள் ஏழாம் திருமுறை ஆகும்.

வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி.

மாணிக்கவாசகர்

மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டி நாட்டில் உள்ள திருவாதவூரில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சம்புபாதாசிரியர். தாயார் பெயர்

சிவஞானவதி அம்மையார். வாதவூரர் என்பது இவரது இயற்பெயர். இவர் பாண்டிய மன்னனின் முதன் மந்திரியாக இருந்தார்.

அரசன் ஏவற்படி, குதிரை வாங்கச் சென்றார். சிவபெருமான் குருவடிவில் வந்து அவரை ஆட்கொண்டு அருளினார். இவர் பல தேனினும் இனிய மாணிக்கமான அருட் பாடல்களைப் பாடினார். இறைவன் மகிழ்ந்து மாணிக்கவாசகர் என்ற பெயர் சூட்டினார்.

இவர் திருவாசகம், திருக்கோவையார் என்பன பாடியுள்ளார். இவை எட்டாம் திருமுறையாகும். இவரின் குருபூசை நாள் ஆனி மகம் ஆகும்.

ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

சேக்கிழார் பெருமான்

சேக்கிழார் பெருமான் தொண்டை நாட்டில் சேக்கிழார் பரம்பரையில் பிறந்தார். இவருக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் அருள்மொழித்தேவர் ஆகும். இவரது தம்பியார் பெயர் பாலறாவாயர். இவர் கல்வி, கடவுள் வழிபாடு, நல்லொழுக்கம் மிகுந்தவர். அதனால் சோழ மன்னன் இவரை தனது மந்திரியாக நியமித்தான். சேக்கிழார் பெருமானும் சோழ மன்னனுக்கு அறிவுரைகள் கூறி வந்தார். சேக்கிழார் சிவபெருமானிடத்தில் பக்தி உடையவர். அவர் அரசனையும் சிவபக்தியில் ஈடுபடும்படி செய்தார். பின்னர் அரசன் விருப்பத்திற்கு ஏற்ப சிவன் அடியார்களைப் பற்றிப் பாடினார். அவர் பாடிய நூலுக்கு பெரியபுராணம் என்று பெயர். பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும். இது சிவமணமும் செந்தமிழும் செறிந்த அருட் பாடல்களாகும்.